# வந்தவாசி நகரமன்றக் கூட்டம்
## சாதாரணக் கூட்ட அறிவிப்பு

31.05.2021–ம் தேதி திங்கட் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

---

முன்னிலை : D.உஷாராணி.,
தனி அலுவலர் மற்றும் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்,(பொ)
வந்தவாசி நகராட்சி.

**பொருட்கள்**

குறள் :

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக.

072. வந்தவாசி நகராட்சி பொதுசுகாதார பிரிவில் எச்சூர் உரக்கிடங்கில் JCB வாகனம் மூலம் குப்பைகளை ஒன்றாக சேர்த்து விடுவதற்கு 29.04.2021–ல் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | JCB –1 மணி நேரத்துக்கு | டிரைவர் படி |
|---|---|---|---|
| 1 | என்.திருநாவுக்கரசு, 25, காஞ்சிபுரம் ரோடு, வந்தவாசி. | 1050 | 150 |
| 2 | ஆ.அஜீஸ், ஒப்பந்ததாரர், 26, மக்தும்மரைக்காயர் தெரு, வந்தவாசி. | 1100 | 100 |
| 3 | ப.முருகேசன், ஒப்பந்ததாரர், 43, தர்மராஜாகோயில் தெரு, வந்தவாசி. | 1000 | 100 |

அலுவலக குறிப்பு–

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. நகராட்சியில் உள்ள உரங்கிடங்கு எச்சூரில் JCB மூலம் ஒன்றாக சேர்த்து விட அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி பெற்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ப.முருகேசன், ஒப்பந்ததாரர், என்பவருக்கு பணி உத்திரவும் JCB இயக்கியது தொகை வழங்கவும், நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேலும் செலவினம் ரூ.60,000/– மன்ற அனுமதி வைக்கப்படுகின்றது.

(ந.க.எண்.1012/2021/எச்1, நாள். 29.04.2021) (அனுமதிக்கப்பட்டது)

073.டோனர் வந்தவாசி நகராட்சி அலுவலக பொதுப்பிரிவில் பயன்படுத்தி வரும் கணினிகளுக்கு டோனர் போதுமான அளவு இல்லாததால் தற்போது 2020–2021ம் ஆண்டிற்கான தணிக்கை தடை நடைபெற்றுக்கொண்டு உள்ளதாலும், தணிக்கைக்கு சொத்துவரி, குடிநீர்வரி, தொழில்வரி D&O போன்ற இனங்களுக்கு நிலுவை, நடப்பு, கேட்பு போன்ற இனங்களை கணினியில் பிரிண்ட் எடுக்க உள்ளதால் டோனர் வாங்கி கொள்ளவும், அதை அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனமான SIDCO அம்பத்துார், சென்னை என்ற நிறுவனத்தில் வாங்கிகொள்ளவும், அதற்கான செலவினம் ரூ.3.00 (மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி கணினி பொருட்கள் டோனர் சப்ளை பெற்றமைக்கு ரூ.3.00 (மூன்று லட்சம் மட்டும்) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1012/2021/எச்1, நாள். 20.05.2021) ( மன்றம்அனுமதிக்கப்பட்டது)

**074.** கொரோனா தடுப்பு – வந்தவாசி நகராட்சி வந்தவாசி நகர பகுதியில் அமைந்துள்ள **24** வார்டு பகுதிகளில் கொரோனா Swap Test எடுக்க அந்தந்த வார்டு பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு அந்தந்த வார்டு பகுதியில் ஷார்மினார் அமைத்து கொடுக்கவும், குடிநீர் வசதி செய்து தரவும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க அந்தந்த பகுதியில் ஷார்மினார் அமைத்து கொடுக்க ஆகும் தோராய செலவினம் ரூ.**50,000/–** மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி கொரோனா தொற்று
   Swap Test –க்கு பந்தல் அமைத்து கொடுப்பதற்கு
   ரூ.**50,000** /–க்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.**1012/2021**/எச்1, நாள். **20.05.2021**) ( மன்றம்அனுமதிக்கப்பட்டது)

**075.** சட்டமன்ற தேர்தல் **2021**– தேர்தல் வந்தவாசி நகர பகுதியில் **24** வார்டுகள் உள்ளன. அதில் **35** வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டன, அதில் **1050** மேற்பட்ட வாக்குச்சாவடி மையங்களை இரண்டாக பிரிக்கப்பட்டு இரண்டு வாக்குச்சாவடி மையங்களாக அமைக்கப்பட்டன. அந்த வாக்குச்சாவடி மையங்களுக்கு ஷார்மினார் மின்விளக்கு குடிநீர் வசதிகள் செய்து தரப்பட்டது. அதற்கான செலவினம் ரூ.**13,700/–** மட்டும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. செலவினத்தொகையை ஜன்னத்ருல் பிர்தோஷ் சப்ளையர்ஸ், வந்தவாசி என்ற நிறுவனத்திற்கு பில் தொகை வழங்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.**1015/2021**/இ1, நாள். **25.05.2021**) (அனுமதிக்கப்பட்டது)

**076.** வழக்கு –வந்தவாசி நகராட்சி பழைய பேருந்து நிலைய கடை வியாபாரிகள் சங்கம் – சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது. வழக்கு எண்.**974/2018** ஆகும், மேற்படி வழக்கினை வழக்கறிஞர் திரு.O.செல்வம் அவர்கள் உயர்நீதி மன்றத்தில் வழக்கினை எடுத்து நகராட்சிகள் சார்பாக வழக்கை எடுத்து நடத்தி கொடுப்பதற்கான அவ்வழக்கின் வழக்கு கட்டணம் ரூ.**15,000/–** (ரூபாய் பதினைந்து ஆயிரம் மட்டும்) வழக்கு கட்டணம் செலுத்த கேட்பு அனுப்பப்பட்டுள்ளார். எனவே மேற்படி வழக்கு கட்டணத்தை வழக்கறிஞர் திரு.O.செல்வம் அவர்களுக்கு வழங்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. வழக்கு கட்டணம் ரூ.**15,000/–**க்கு
   மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.**0201/2021**/சி1, நாள். **09.04.2021**) (அனுமதிக்கப்பட்டது)

**077.** வழக்கு வந்தவாசி நகராட்சியில் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள ஆற்காடு திண்டிவனம் சாலை கடைகளின் குத்தகைதாரர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்கள் அவ்வழக்கு எண்.WPNO.7278/2019 வழக்கு எண்.நிலுவையில் உள்ள அவ்வழக்கை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கினை எடுத்து வழக்கு விசாரணை நடத்தி வருகிறார். அவ்வழக்கு சம்மந்தமான வழக்கு கட்டணம் ரூ.**15,000/–** (பதினைந்தாயிரம் மட்டும்) வழக்கு ஏற்று நடத்த வழக்கு கட்டணம் வழக்கறிஞர் திரு.O.செல்வம் அவர்களுக்கு வழங்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. வழக்கு கட்டணம் ரூ.**15,000/–**க்கு
   மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.**023/2021**/சி1, நாள். **09.04.2021**) (அனுமதிக்கப்பட்டது)

**078.**வந்தவாசி நகராட்சியில் குடிநீர் விநியோகம் செய்யார் அனக்காவூரில் உள்ள தலைமை நீரேற்று நிலையத்தின் மூலம் பெறப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் செய்யார் ஆற்றில் உள்ள நீர் உறிஞ்சும் கிணறுகளில் பக்கவாட்டில் ஏற்பட்டுள்ள உடைப்புகளை சரி செய்தும் அவற்றின் மேற்பரப்பில் போடப்பட்ட RCC சிலாப்களில் உடைப்பு பகுதியினை RCC சிலாப் பொருத்தவும், அவற்றின் பழுதுகளை சரிசெய்ய விடப்பட்டுள்ள இரும்பிலான சிலாப்களின் மூடியினை பொருத்தவும், நீர் உறிஞ்சும் கிணறுகளில் உள்ள மின் மோட்டார்கள் மற்றும் கேபிள் ஒயர்கள் குடிநீர் விநியோகம் செய்ய பொருத்தப்பட்ட மின் மோட்டார்கள் இரும்பு பழுதுகளை சரிசெய்யவும் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளவும், மாவட்ட நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு **15–**ன்கீழ் பணிகள் செய்ய தோராயமான செலவினம் ரூ.**3.00** (ரூபாய் மூன்று இலட்சம் –க்கு) மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. அவசரம் அவசியம் கருதி குடிநீர் பணி அவசியம் எனவும்
   மாவட்ட நகராட்சினயிள் சட்டம் **1920** –பிரிவு **15**ன் கீழ்
   பணி மேற்கொள்ளவும் மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 280 /2021/இ1, நாள். 07.05.2021)** **(அனுமதிக்கப்பட்டது)**

**079.**வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட காஞ்சிபுரம் சாலையில் உள்ள சந்திப்பில் உயர் கோபுர மின்விளக்கு பழுதடைந்து சில மின்விளக்குகள் எரியப்படவில்லை, என்பதால் பொதுமக்கள் மிகவும் சிரமபடுகின்றனர். எனவே பொது மக்கள் கோரிக்கையை ஏற்று உயர்கோபுர மின்விளக்குகளை ஒளிர வைக்க ஆகும் தோராய செலவினம் மதிப்பீடு தொகை ரூ.**16000/–**க்கு பணியினை மேற்கொள்ளவும், அவசரம் அவசியம் கருதி உள்ளூர் ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளியினை பெற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 281 /2021/இ1, நாள். 07.05.2021)** **(அனுமதிக்கப்பட்டது)**

**080.** வந்தவாசி நகராட்சியில் நகராட்சி அலுவலகம் வளாக முன்பக்க சுற்றுச்சுவர் ஆனது மினவும் பழுதடைந்து கீழே விழும் நிலையில் உள்ளது. இதனால் முன்பக்கம் பேருந்திற்காக மற்றும் அலுவலகத்திற்கு வரும் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர், மேலும் சுற்றுசுவரில் பொருத்தப்பட்ட நுழைவு கேட்டானது மூட முடியாமல் உள்ளது. இரவு நேரங்களில் பாதுகாப்பது மிகவும் சிரமமாக உள்ளதால் பொதுமக்களின் பாதுகாப்பிற்காக அவசரம் அவசியம் கருதி சுற்று சுவர் பழுதடைந்ததை அகற்றிவிட்டு புதியதாக கட்டும் பணிக்கு தோராய செலவினம் ரூ.**25,000/–**க்கு உள்ளூர் ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**(ந.க.எண்.282 /2021/இ1, நாள். 07.05.2021)** **(அனுமதிக்கப்பட்டது)**

**081.** அலுவலக உபயோக பொருட்கள் வந்தவாசி நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவைப்படும் ஏ**4** பேப்பர், லிகல் பேப்பர், அலுவலக உபயோக பொருட்கள் **2020–2021**ம் ஆண்டிற்கு தேவையான அலுவலக பொருட்கள் , மேலும் **2020–2021**ம் ஆண்டு தணிக்கை தடை நடைபெற உள்ளதால் கேட்பு பதிவேடு எடுக்கவும், பேப்பர் உபயோக பொருட்கள் தேவைப்படுவதால் அதை அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு நிறுவனமான ஜார்ஜ் ஜாக்சன் டவுன் பல்நோக்கு தொழில் கூட்டுறவு சங்கம் சென்னை என்ற நிறுவனத்தில் வாங்கி கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.**5.00**(ஐந்து இலட்சம் மட்டும் மன்றம் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. அவசரம் அவசியம் கருதி, அலுவலக பயன்பாட்டிற்காக
   தேவைப்படும் பதிவேடுகள் ஸ்டேசனரி பொருட்கள்
   கொள்முதல் செய்ய தோராய செலவினம் ரூ.**5.00**
   (ஐந்து லட்சம் மட்டும்) மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**(ந.க.எண். 283 /2021/இ1, நாள். 17.05.2021)** **(அனுமதிக்கப்பட்டது)**

082. வந்தவாசி நகராட்சிக்குட்பட்ட காஞ்சிபுரம் சாலையில் உள்ள நவீன ஆடு அறுக்கும் தொட்டியில் ஆழ்துளை கிணறு மோட்டா ர் பழுது மற்றும் மின்சாதனப்பொருட்கள், குழாய் வால்வுகள் பழுது ஏற்பட்டுள்ளதால், குத்தகை பணிமேற்கொள்ளாமல் உள்ளது. மேலும் இப்பணிகளை பழுது நீக்கம் செய்து மாற்றி அமைக்க தோராய செலவினமாக மதிப்பீட்டு தொகை ரூபாய்.30,000/-(மூப்பதாயிரம் மட்டும்) உள்ளூர் ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு-</u>

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.284 /2021/இ1, நாள். 07.05.2021) (அனுமதிக்கப்பட்டது)

083. வந்தவாசி நகராட்சி பொது சுகாதார பிரிவில் FSTP –ல் உள்ள எச்சூர் உரக்கிடங்கில் JCB வாகனம் மற்றும் நகர் பகுதியில் உள்ள பெரிய கால்வாய் மண் அள்வதற்கும் 11.02.2021–ல் விலைப்புள்ளி கீழ்காணும் விவரத்தில் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | JCB –1 மணி நேரத்துக்கு | டிரைவர் படி |
|---|---|---|---|
| 1 | ஆ.பாஷா, ஒப்பந்ததாரர் காயிதே மில்லத் நகர், வந்தவாசி. | 1100 | 200 |
| 2 | இ.மஜீத், ஒப்பந்ததாரர், மீரா காதர் ஷா தெரு, வந்தவாசி. | 1050 | 150 |
| 3 | ஆ.அஜீஸ், ஒப்பந்ததாரர், 26, மக்தும்மரைக்காயர் தெரு, வந்தவாசி. | 1000 | 100 |

<u>அலுவலககுறிப்பு-</u>

1. மன்றம் முடிவு செய்யலாம்.
2. நகராட்சியில் உள்ள உரக்கிடங்கு எச்சூர் FSTP ல் உள்ள குப்பைகள் மண் JCB மூலம் ஒன்றாக சேர்த்து விட மற்றும் நகர் பகுதியில் உள்ள ஆக்கிரமிப்பு கால்வாய் மேல் உள்ள நிரந்தர பலகை ஆகியவை அகற்றி மண் அள்ளவும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திரு. ஆ.அஜீஸ், ஒப்பந்ததாரர், என்பவருக்கு பணி உத்திரவு JCB இயக்கிய பின்பு தொகை வழங்கிடவும் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. மேலும் தோராய செலவினம் ரூ.1,10,000/– மன்ற அனுமதி வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.285 /2021/இ1, நாள். 16.02.2021) (அனுமதிக்கப்பட்டது)

084. வந்தவாசி நகராட்சிக்குட்பட்ட காஞ்சிபுரம் சாலையில் உள்ள நவீன ஆடு அறுக்கும் தொட்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கு மூன்று ஆண்டு காலத்திற்கு (2021-2022 மற்றும் 2023 -2024) 21.05.2021 அன்று நடைபெற்ற மறு ஏல அறிக்கை மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் இரண்டு நபர்கள் கலந்து கொண்டதில் திரு.மஜீத் என்பவர் 73000/- திரு,B.A.பஷீர் 74000/-க்கு ஏல கேள்வி கோரப்பட்டதில் உச்சபட்ச கேள்வி கொடுத்துள்ள திரு,B.A.பஷீர் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ளப்பட்டு, திரு,B.A.பஷீர் என்பவருக்கு ஆடு அறுக்கும் தொட்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (01.06.2021 முதல் 31.03.2024 முடிய) மூன்று ஆண்டு காலத்திற்கு) மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு-</u>

அவசர அவசியம் கருதி தனி அலுவலர்
மற்றும் ஆணையர்(பொ) அனுமதி பெற்று
உயர்ந்த ஏலம் கோரிய திரு,B.A.பஷீர் என்பவரது
கேள்வி தொகை ரூ.74000/- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0099/2021/அ1, நாள். 05.2021) (அனுமதிக்கப்பட்டது)

085. வந்தவாசி நகராட்சியில் உள்ள 24 வார்டு பகுதிகளிலும் கொரோனோ நோய் தொற்று காற்றின் மூலம் பரவலை தடுக்க Mist blower கொண்டு டிராக்டர் மூலம் கிருமி நாசினி கொண்டு தெளிக்க விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்றுள்ள டிராக்டர் உரிமையாளர் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

1. ஜெ.வெங்கிடேசன், த/பெ.ஜெயராமன், நெ.61, பிராமணர்தெரு நெற்குணம் கிராமம், வந்தவாசி வட்டம். – ஒரு மணி நேரத்திற்கு ரூ.710/–என்கிற அடிப்படையில்.

2.சி.பாஸ்கரன் த/பெ.சிவப்பிரகாசம், 494 பள்ளத்தெரு வைலாமூர் கிராமம், வந்தவாசி வட்டம். – ஒரு மணி நேரத்திற்கு ரூ.710/–என்கிற அடிப்படையில்.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கொரோனோ நோய் தடுப்பு பணிக்கு கிருமி நாசினி கொண்டு தெளிக்கவும் நோய் பரவாமல் கட்டுக்குள் கொண்டு வரவும், சட்டமன்ற உறுப்பினர் ஆய்வு கூட்ட அறிவுரைப்படி டிராக்டர் கொண்டு Mist blower மூலம் இரண்டு வாடகை டிராக்டர் கொண்டு 24 வார்டு பகுதிகள் மற்றும் பஜார் பகுதியில் சுழற்சி முறையில் இயக்கியதற்கு அனுமதி வழங்கலாம்.
3. இதற்கு உண்டான தோராய செலவினம் ரூ.4.00 (ரூபாய் நான்கு இலட்சத்திற்கு) மன்றம் அனுமதி வேண்டப்படுகின்றது.

(ந.க. எண். 0706 /2020/எச்1) (அனுமதிக்கப்பட்டது)

086. வந்தவாசி நகராட்சியில் மக்தும் மரைக்காயர் தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 25.02.2021 தேதியன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.ஆ.அஜீஸ் | மதிப்பீட்டைவிட(–)0.02% குறைவு |
| 2. | திரு.P.முருகேசன் | மதிப்பீட்டைவிட(+) 0.35% அதிகம் |

அலுவலக குறிப்பு–

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட **0.02%** குறைவாக வரப்பெற்றுள்ள **திரு. ஆ.அஜீஸ்** ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

(ந.க. எண். 1678 /2020/இ1) (அனுமதிக்கப்பட்டது)

087. வந்தவாசி நகராட்சியில் 01 முதல் 24 வார்டுகள் உள்ளன. இவ்வார்டுகளில் உள்ள தெருக்களில் உள்ள தெருவிளக்குகளில் ஏற்படும் பகுதியினை சரிசெய்ய மற்றும் பராமரிப்பு செய்ய தேவையான உபகரணங்கள் மற்றும் உதிரிபாகங்கள் கொள்முதல் செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான SISCO, N.A.Dt., (Small Industries Socing Co-Operative Socity) Vellore, அவர்களின் மூலம் விலைப்புள்ளி பெறப்பட்டு தேவையான பொருட்களை வாங்க தோராய செலவினம் மதிப்பீடு ரூ.3.00 (மூன்று இலட்சத்திற்கு) மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

அலுவலக குறிப்பு–

1. மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.1012/2021/எச்1, நாள். 11.05.2021) (அனுமதிக்கப்பட்டது)

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்(பொ)
வந்தவாசி நகராட்சி